வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்ணா காசிம்

தேதி 02.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

மாற்றுத்திறனாளிகள் சமமாக நடத்தப்படும் போது தான் ஒரு சமுகம் உண்மையான வளர்ச்சியை அடைந்ததாக கூற முடியும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் 50 ஆயிரம் புதிய அடல் டிங்கரிங் ஆய்வகங்களை அரசு நிறுவ உள்ளது என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

அரசியல் அமைப்பு சபையின் தலைவராக, சட்டத்தை உருவாக்குவதற்கு வழிகாட்டிய, சுதந்திர போராட்ட வீரர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

காசி தமிழ் சங்கமத்தின் தொடக்க விழாவில் பங்கேற்றது தமக்கு மறக்க முடியாத தருணமாக அமைந்தது என்று புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறியுள்ளார்.

முர்மு (12)

மாற்றுத்திறனாளிகள் சமமாக நடத்தப்படும் போது தான் ஒரு சமுகம் உண்மையான வளர்ச்சியை அடைந்ததாக கூற முடியும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளின் அதிகாரமளிப்பிற்கான தேசிய விருதுகள் வழங்கும் விழாவில் உரையாற்றிய அவர், மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரம் அளிப்பதில் அவர்களின் முயற்சிகளுக்காக,

தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தேசிய விருதுகளை வழங்கினார். மேலும், மாற்றுத்திறனாளிகளை மரியாதையுடனும், கண்ணியத்துடனும் நடத்த வேண்டும் என்றும், அவர்களின் சாதனைகள் அனைவருக்கும் உத்வேகத்தை அளிப்பதாக திருமதி திரவுபதி முர்மு கூறினார். குறிப்பாக, பாராலிம்பிக்ஸ் 2024 ல், இந்திய விளையாட்டு வீரர்கள் 29 பதக்கங்களை வென்று சாதனை புரிந்ததை அவர் நினைவு கூர்ந்தார்.

நாடாளுமன்றம் 1 (3)

நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடரின் 3 ஆம் நாளான இன்று, மக்களவை மற்றும் மாநிலங்களவைகளில் மத்திய அமைச்சர்கள் பல்வேறு கேள்விகளுக்கு எழுத்துபூர்வமாக அளித்துள்ள பதில்கள் குறித்த செய்தித் தொகுப்பு.........

(வாய்ஸ்)

நாடாளுமன்றம் 2 (16)

(வாய்ஸ்)

புயல்கள், பருவம் தவறிய மழை மற்றும் பூகம்பங்கள் போன்ற இயற்கை சீற்றங்களால் ஏற்படும் உயிர் மற்றும் சொத்து இழப்பை தடுக்கவும், குறைக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருவதாக மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துபூர்வமாக பதில் அளித்த டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். மத்திய புவி அறிவியல் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், இந்திய வானிலை ஆய்வுத் துறை தொடர்ந்து பொதுமக்களுக்கும், சம்மந்தப்பட்ட துறை சார்ந்த

அதிகாரிகளுக்கும் சரியான நேரத்தில் எச்சரிக்கைகள் மற்றும் முன்னறிவிப்புகளை வெளியிடுவதாக கூறினார்.

நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் 50 ஆயிரம் புதிய அடல் டிங்கரிங் ஆய்வகங்களை அரசு நிறுவ உள்ளது என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார். இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது துணை பிரிவுகளுக்கு பதில் அளித்த அவர், பள்ளி அளவில் புதுமைகளை ஊக்குவிப்பதற்காக அடல் புதுமை திட்டத்தின் கீழ், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அடல் டிங்கரிங் ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன என்றும், பள்ளிகளில் ஆராய்ச்சி மற்றும் புதுமைகளை



ஊக்குவிப்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி இந்த இயக்கத்தை தொடங்கி உள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டு மக்களின் தனிப்பட்ட தரவை பாதுகாப்பதற்காக நாடாளுமன்றம் டிஜிட்டல் தனி நபர் தரவு பாதுகாப்பு சட்டத்தை இயற்றி உள்ளது என்று மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், நாட்டு மக்களின் தனிப்பட்ட தரவை பாதுகாக்க முன்பு எந்த வழிமுறையும் இல்லாததால் மத்திய அரசு இந்த சட்டத்தை கொண்டு வந்துள்ளதாக கூறினார்.

மோடி (11)

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது அலுவலகத்தின் பெயரை சேவா தீர்த்தம் என்று மாற்றியுள்ளார். ராஜ்பவன் மற்றும் ராஜ்நிவாசின் பெயர்கள் லோக் பவன், மற்றும் லோக் நிவாஸ் என மாற்றப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தமது சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். சேவை மற்றும் நல்லாட்சியை முக்கிய முன்னுரிமைகளாக கொண்டு வளர்ந்த மற்றும் உயர்ந்த இந்தியாவை உருவாக்குவதற்கான நாட்டின் பயணத்தில் இது ஒரு முக்கிய மைல் கல் என்று அவர் கூறினார். கடந்த 11 ஆண்டுகளாக பிரதமர் திரு நரேந்திர மோடி சேவைக்கு முன்னுரிமை அளித்துள்ளதாகவும், பிரதமர் தன்னை ஒரு முக்கிய சேவகராக கருதி மக்களுக்கு 24 மணி நேரமும் சேவையாற்றுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கடற்படை முர்மு (9)

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கடற்படை தினம் 2025 கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காக 2 நாள் பயணமாக இன்று திருவனந்தபுரம் சென்றடைந்தார். சங்குமுகம் கடற்கரையில் அவருக்கு, சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. கடற்படையின் வலிமை மற்றும் போர் தயார் நிலையை எடுத்துக் காட்டும் செயல் விளக்க நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றார். இதில், 19 முக்கிய போர் கப்பல்கள் மற்றும் போர் விமானங்கள், கண்காணிப்பு விமானங்கள் உட்பட 32 விமானங்கள் இடம் பெற உள்ளன. இந்த நிகழ்ச்சிக்கு பிறகு குடியரசு தலைவர் லோக் பவனுக்கு சென்று, நாளை காலை புதுடெல்லி திரும்ப உள்ளார்.

ராஜேந்திரபிரசாத் (15)

நாட்டின் முதல் குடியரசு தலைவர் டாக்டர் ராஜேந்திரபிரசாதின் பிறந்த நாளான இன்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன், மற்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் அவருக்கு அஞ்சலி செலுத்தினர். திரு சி பி இராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், அரசியல் அமைப்பு சபையின் தலைவராக தனது ஞானத்தால் சட்டத்தை உருவாக்குவதற்கு வழிகாட்டிய உயர்ந்த சுதந்திர போராட்ட வீரர் டாக்டர் பிரசாத் என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், இந்திய சுதந்திர போராட்டத்தில் தீவிரமாக பங்கேற்று, அரசியலமைப்பு சபைக்கு தலைமை தாங்கியது முதல், நாட்டின் முதல் குடியரசு தலைவராக பதவி ஏற்றது வரை டாக்டர் பிரசாதின் கண்ணியம், அர்ப்பணிப்பு மற்றும் தேசத்திற்கான சேவை ஆகியவை ஒப்பிட முடியாதவை என்று குறிப்பிட்டுள்ளார். டாக்டர் பிரசாத்தின் எளிமை மற்றும் துணிச்சலை பாராட்டிய பிரதமர் அவரது சேவை மற்றும் தொலைநோக்கு பார்வை வரும் தலைமுறையினருக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கும் என்று கூறினார்.

எஸ்ஐஆர் (10)

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்ததின் இரண்டாம் கட்ட பணிகள் தொடங்கப்பட்டதில் இருந்து, இதுவரை, 50 கோடியே, 85 லட்சத்திற்கும் அதிகமான படிவங்கள் வாக்காளர்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

புதுச்சேரியில் கடந்த மாதம் 4 ஆம் தேதி தொடங்கிய எஸ்ஐஆர் எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் வரும் 11 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. வாக்காளர்கள் பலரும் படிவங்களை நிரப்பி கொடுப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அந்த வகையில், புதுச்சேரி கதிர்காமம் தொகுதிக்கு உட்பட்ட ராதாகிருஷ்ணன் நகரை சேர்ந்த வாக்காளர் திருமதி ராஜலட்சுமி என்ற வாக்காளர் கூறுகையில்........

(வாய்ஸ் – ராஜலட்சுமி )

*காசி தமிழ் சங்கமம்* (17)

உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் நடைபெறும் காசி தமிழ் சங்க விழாவில் கலந்து கொள்ளும் பங்கேற்பாளர்களை வழியனுப்பும் விழாவில் புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கலந்து கொண்டு உரையாற்றினார். புதுச்சேரி தனியார் உணவகத்தில் நடைபெற்ற விழாவில் உரையாற்றிய அவர், காசி தமிழ் சங்கமத்தின் தொடக்க விழாவில் பங்கேற்றது தமக்கு மறக்க முடியாத தருணமாக அமைந்தது என்றும், தமிழ் மொழியையும், பண்பாட்டையும் மனதாலும், அறிவாலும் நேசிக்கும் ஒரு தமிழனாக அந்த விழாவில் கலந்து கொண்டது பெருமை அளிப்பதாகவும் கூறினார். இந்த ஆண்டின் கருப்பொருள் தமிழ் கற்கலாம் என்பது, தமிழ் மொழியை நேசிக்கும் அனைவருக்கும் ஒரு முக்கியமான தளமாக மாறியுள்ளது என்றும் கூறினார். காசி விஸ்வநாதர் கோவிலுக்கு 46 ஆண்டுகளுக்கு பிறகு தான் சென்றதாக தெரிவித்த துணை நிலை ஆளுநர், கோவில் புதுப்பிக்கப்பட்டு அற்புதமான தோற்றத்துடன் விளங்குவதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடியின் முயற்சியை பாராட்டினார். இதுதான் பாரதம், இதுதான் பாரத பண்பாடு என்பதை

குறிப்பது இந்த காசி தமிழ் சங்கமம் தான் என்று தெரிவித்தார். மேலும் இதுகுறித்து அவர் பேசுகையில்.......

வாய்ஸ் ( துணை நிலை ஆளுநர்)

*ஜெய்சங்கர்* (10)

இலங்கையின் வெள்ள நிவாரண பணிகளில் இந்தியா தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். 70 க்கும் மேற்பட்ட மருத்துவ மற்றும் துணைப் பணியாளர்கள், அத்தியாவசிய வாகனங்களை ஏற்றிச் சென்ற இந்திய விமானப்படையின் சி-17 போக்குவரத்து விமானம் நேற்று கொழும்புவில் தரையிறங்கியதாக டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். இந்திய விமானப்படையின் எம்ஐ-17 ஹெலிகாப்டர்கள் தொடர்ந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகிறது என்றும், 8 டன்களுக்கும் அதிகமான நிவாரண பொருட்களை விமானத்தில் ஏற்றிச் சென்றதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*புடின்* (12)

23 ஆவது இந்தியா-ரஷ்யா வருடாந்திர உச்சி மாநாட்டிற்காக, ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புடின் இந்தியா வர உள்ளார். இந்த பயணத்தின் போது இந்தியாவும், ரஷ்யாவும், வர்த்தகம், பொருளாதாரம், சுகாதாரம், கல்வி, கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட உள்ளன. இரு நாடுகளுக்கும் இடையே, வளர்ந்து வரும் வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. மேலும், பாதுகாப்பு, எரிசக்தி, மற்றும் விண்வெளியில்

இந்தியாவிற்கும், ரஷ்யாவிற்கும் இடையே ஒத்துழைப்பு குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது. இந்திய மக்கள் வரலாற்று ரீதியாக ரஷ்யாவின் சிறந்த நண்பர்கள் என்றும், அதன் பயணத்தில் இந்தியாவுடன், தோளோடு தோள் சேர்ந்து செயல்படுவதில் மாஸ்கோ பெருமைப்படுகிறது என்று ரஷ்ய அதிபரின் செய்தித் தொடர்பாளர் திரு டிமிட்ரி பெஸ்ஹோவ் தெரிவித்துள்ளார்.

விளையாட்டு (6)

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையே 3 போட்டி கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது போட்டி இன்று மதியம் 1.30 மணிக்கு சத்தீஸ்கரின் ராய்பூரில் உள்ள ஷாகீத் வீர் நாராயண் சிங் சர்வதேச மைதானத்தில் தொடங்கியது. முதலில் பேட்டிங் செய்யும் இந்திய அணி, சற்று முன் வரை, ---------- ஓவர்களில், ----------- விக்கெட் இழப்பிற்கு, ------- ரன் எடுத்துள்ளது.